டங்களில் நடத்தப்படவில்லை. விரைவில் அதற்கான ஏற்பாடு செய்யப்படுமா? குறிப்பாக, நீலகிரி மாவட்டத்தில் நூற்றாண்டு விழா நடக்கவில்லை.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முறையாக, முடிந்த அளவு மாவட்டங்களிலே நடத்தப்படும்.

Sub-Court at Tiruvellore

* Q. No. 739—Thiru N. KITTAPPA ; Will the Hon. the Minister for Law be pleased to state;

(a) whether any representation for the location of a Sub Court at Tiruvellore ; has been made to the Government by the local sociation about 24th May 1978 ; and

(b) if so, the action taken thereon?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) ஆம்.

(ஆ) திருவள்ளூரிலே ஒரு துணை நீதி மன்றம் ஏற்படுத்த உயர் நீதி மன்றம் சிபாரிசு செய்துள்ளது, அதனுடைய முன்னுரிமைப் பட்டியலிலே உள்ளது. நிதிநிலைமையைப் பொறுத்து, 1979–80 ஆம் ஆண்டிலே துவக்க இந்த அரசு உத்தேசித்துள்ளது.

திரு. கே. ஜே. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம் போளூரில் முன்சிப் சப்கோர்ட் ஏற்படுத்த அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா? அது எந்த நிலையில் உள்ளது என்பதை அறிவிப்பார்களா?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, அரசினுடைய பரிசீலனையில் உள்ளது.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவை ஒட்டி சிறைக் கைதிகள் விடுதலை.

*வினா எண். 740—திரு. கே. பண்ணை சேதுராம்.

திரு. மு. அம்பிகாபதி,

திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி சிறையில் இருக்கும் அரசியல் மற்றும் சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்ற கைதிகளை விடுதலை செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?